# நார்த்ஷோர் பள்ளி மாவட்டம்

மாணவர் சேவைகள், செயல்பாடுகள்,

உடல்நலம், மாணவர் ஆதரவு

ரிக் ஃபெரெல், இயக்குநர்

3330 மான்டே வில்லா பார்க்வே
போத்தெல், WA 98021
(425) 408-7725
தொலைநகல் (425) 408-7729


ஆகஸ்ட் 18, 2022

அன்பார்ந்த பெற்றோர்களே,

நார்த்ஷோர் பள்ளிகள் மாநிலத்தின் பாதுகாப்பான பள்ளிகளில் உள்ளடங்கும் பள்ளிகளாக தொடர்ந்து நீடிக்கும். இருப்பினும், சமூகத்தில் உள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது பள்ளிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். துப்பாக்கிகள் மற்றும் ஆபத்தான ஆயுதங்கள் ஆகியவை குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பாதுகாப்பை அச்சுறுத்துவது துரதிர்ஷ்டவசமானது ஆகும். சமீபத்திய மாநில மற்றும் கூட்டாட்சி சட்டங்களுடன் ஒத்துப்போகும் வகையில் இந்த சிக்கலை தீர்க்க, நார்த்ஷோர் ஆனது *மாணவர் நடத்தை தொடர்பான உரிமைகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையில் ஆபத்தான* ஆயுதங்கள் மற்றும் ஆயுதங்கள் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது குறித்த பள்ளி வாரியக் கொள்கையை கைக்கொண்டுள்ளது.

சட்டத்தின் கீழ் (RCW 9.41.280) *, பள்ளி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் பள்ளி பேருந்துகள், பள்ளி மற்றும் பள்ளி அல்லாத வசதி அமைப்புகள் உட்பட்ட பள்ளியின் சொத்துக்களுக்குள் எந்தவொரு நபரும் (மாணவர், ஊழியர்கள், பெற்றோர் அல்லது புரவலர்) துப்பாக்கி அல்லது ஆபத்தான ஆயுதத்தை எடுத்துச் செல்வது மிகப்பெரிய தவறான செயலாகும். ஆயுதமானது பூட்டப்பட்ட வாகனத்தில் இருந்தாலும், உரிமையாளருக்கு உரிய அனுமதி உள்ளதா என்பதைப் பொருட்படுத்தாமல், 18 வயதுக்குட்பட்ட எந்தவொரு மாணவரோ அல்லது மாணவர் அல்லாதவரோ வளாகத்தில் ஆயுதம் வைத்திருப்பது சட்டவிரோதமானது ஆகும். பள்ளிகளில் துப்பாக்கிகள் இருப்பதை தடை செய்யும் அடையாளப் பலகைகள் இருக்க வேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது. பள்ளிகள் துப்பாக்கி மற்றும் போதைப்பொருள் இல்லாத பகுதிகள் என்று குறிப்பிடும் அடையாளங்கள் நார்த்ஷோர் பள்ளிகளில் உள்ளன.

இந்த சட்டத்தை மீறுவதால் ஏற்படும் விளைவுகள் மற்றும் மாவட்டக் கொள்கையை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். **ஆயுத அத்துமீறலானது முறையான செயல்முறை மற்றும் மேல்முறையீடு செய்யும் உரிமைக்கு உட்பட்டு மாவட்டத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவதற்கான காரணமாக அமையலாம்** . ஒரு மாணவன் துப்பாக்கியை பள்ளிக்கு கொண்டு வந்தால், அந்த மாணவனை ஒரு வருடத்திற்கு அரசுப் பள்ளிகளில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று சட்டம் தெரிவிக்கின்றது. துப்பாக்கியைத் தவிர வேறு ஏதேனும் ஆபத்தான ஆயுதம் சம்பந்தப்பட்டிருந்தால், மாணவர் இடைநீக்கம் செய்யப்படலாம். ஆயுதமாக பயன்படுத்தப்படும் பொருட்கள் அல்லது பொம்மை துப்பாக்கிகள் அல்லது கத்திகள் போன்ற ஆயுதங்கள் மாதிரி தோற்றமளிக்கும் பொருள்கள் உண்மையான ஆயுதங்களைப் போலவே கருத்தில் எடுத்துக்கொள்ளப்படலாம். ஆயுத அத்துமீறல் குறித்து பள்ளி அதிகாரிகள் சட்ட அமலாக்க அமைப்புக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். மற்ற பள்ளி மாவட்டங்கள் இது போன்ற ஒரு குற்றத்திற்காக வெளியேற்றப்பட்ட மாணவர்களை அனுமதிக்க மறுக்கலாம். சட்டம் மற்றும் மாவட்டக் கொள்கை ஆகியவை ஆயுதங்கள் மீதான நடத்தை *மீறல்கள் பிரிவில் மாணவர் நடத்தை தொடர்பான* உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கையேட்டில் வழங்கப்பட்டுள்ளது.

உங்கள் மகனுடனோ அல்லது மகளுடனோ இந்த பிரச்சினையைப் பற்றி உங்களுடன் விவாதிக்க ஒரு வாய்ப்பை வழங்கவும். இறுதியில், பள்ளிக்கு ஒரு ஆயுதத்தை கொண்டு வருவதா வேண்டாமா என்பதை மாணவர் தான் முடிவு செய்கிறார். எக்காரணம் கொண்டும் ஆயுதங்கள் பொறுத்துக் கொள்ளப்படாது என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பள்ளியில் ஆயுதங்களை வைத்திருப்பது தவறானது என்பதை அங்கீகரிப்பார்கள் என முதல்வர்கள் மற்றும் உதவி முதல்வர்க} நம்பியுள்ளனர். பள்ளியில் ஆயுதம் வைத்திருப்பது குறித்து மாணவர்கள் பள்ளி அதிகாரிகளை தொடர்பு கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கையை எடுக்க மாணவர்களுக்கு பெற்றோர், சகாக்கள் மற்றும் பள்ளி ஊழியர் ஆகியோரின் ஆதரவு முடிந்தவரை தேவைப்படுகின்றது.

மாணவர்கள், பெற்றோர்கள், பள்ளி ஊழியர்கள் மற்றும் நம் சமூகம் இந்த பிரச்சினையை ஒன்றாக எதிர்கொள்வதால், நார்த்ஷோர் பள்ளிகள் ஒரு பாதுகாப்பான மற்றும் நேர்மறையான கற்றல் சூழலை கொண்டிருக்கும்.

உண்மையுள்ள,

ரிக் ஃபெரெல்

மாணவர் சேவைகள் இயக்குநர்

*விதிவிலக்குகளுக்கு RCW 9.41.280 இன் உட்பிரிவு (3)-ஐ பார்க்கவும்.

கீழே உள்ள உங்கள் கையொப்பம் நீங்கள் ஆயுதங்கள் கடித்தை படித்துவிட்டீர்கள் (அல்லது ஒருவரால் உங்களுக்கு படித்துக்காட்டப்பட்டது. பெற்றோர்/ பாதுகாவலராக, உங்கள் வருகைப்பதிவு தேவைகளுக்கான உங்கள் ஒப்புதல் நார்த்ஷோர் பள்ளி மாவட்டத்தில் சேர்ந்துள்ள உங்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் உரியதாகும்.

கையொப்பம்: **மாணவன் பெயர்** தேதி:

________________________________________